**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 176/2019 |
| Name | : பாலசுப்பிரமணியம் |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 26.03.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது கிருஷ்ணாபுரத்தில் வசித்து கட்டிட வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோனவர் எனது அப்பா ஆவார். அவருக்கு அப்போது வயது சுமார் 70 இருக்கும். தேதி மாதம் ஞாபகம் இல்லை 2016 ம் வருடம் காலை 6.00 மணிக்கு இயற்க்கை உபாதைக்காக என் அப்பா உடுமலை ரோட்டில் கிழக்காக மண் ரோட்டில் நடந்து சௌந்தரராஜன் வீட்டு அருகே சென்று கொண்டிருந்தபோது TVS பைக் என் அப்பா மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். நான்சென்று பார்த்தபோது என் அப்பா பின் மண்டையில் அடிப்பட்டு கீழே விழுந்து கிடந்தார். உடனடியாக 108 ஆம்புலன்ஸ் ்மூலம் உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்று முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு கோவை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு கூட்.டி சென்றோம் அங்கு 4 நாள் சிகிச்சை பெற்று சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள **கையெழுத்து என்னுடையதுதான் அந்த புகார் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின் என்

அப்பாவின் உடலை போலிசாருக்கு அடையாளம் காட்டி பிரேத பரிசோதனையின் போது போலிசாருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவ தேதி என்ன என்றால் ஞாபகம் இல்லை. ஆனால் சுமார் 8 வருடம் இருக்கும் சம்பவத்தன்று எங்கு இருந்தேன் என்றால் என் வீட்டு பக்கத்தில் தான் இருந்தேன். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான் தகவல் தெரிந்து சென்று தான் போய் பார்த்தேன். ஆம்புலன்சில் உடன் சென்றேன். புகாரில் உள்ள விவரம் நான் தான் ஏழுதினேனா இல்லை என்றால் நான் சொல்லி வழக்கறிஞர் எழுதினார். நான் இந்த விபத்தை நேரில் பார்க்காமல் இறந்துபோன என் தந்தைக்கு விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டும் என்பதற்காக கொடுக்கப்பட்ட புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

ஒப்பம்/–கோ.விஜயகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்